செ.கு.எண்: 134

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.4.2012

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், பொள்ளாச்சி வனக்கோட்டம் பகுதியில் வசித்து வரும் திரு. கிருஷ்ணன் என்பவரின் மகன் பரமன் என்கிற கணபதி 5.4.2012 அன்று காட்டில் விறகுகளை சேகரிக்கச் சென்ற போது காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த பரமன் என்கிற கணபதியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான திரு. பரமன் என்கிற கணபதியை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்